# மொழி சமத்துவமே தி.மு.க.வின் இலட்சியம்!

## தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்... முதல் பக்கத் தொடர்ச்சி

உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டின் போது வெளியிட்ட அறிக்கையில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

“தமிழ்மொழி செம்மொழியென முதல் குரல் கொடுத்த தமிழூர் பரிதிமாற்கலைஞர் என்றால், தமிழ்மொழிசெம்மொழியென்று முதலில்சொன்னவெளிநாட்டவர் அறிஞர் ராபர்ட் கால்டுவெல் ஆவார். பரிதிமாற் கலைஞர் தமிழ்மொழி செம்மொழியென 1887-ம் ஆண்டு குரல் கொடுத்த தற்கு30ஆண்டுகளுக்குமுன்பே, 1856-ம் ஆண்டு அறிஞர் கால்டு

> **இந்திய ஒன்றியத்தின் அலுவல் மொழிதான் இந்தி. அத்துடன் ஆங்கிலமும் இணை அலுவல் மொழியாக இருக்கிறது. இந்திதான் தேசிய மொழி என்பது முற்றிலும் தவறானது.**

வெல் தாம் எழுதிய ‘திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்’ என்ற ஒப்புவமை காண்பித்திட இயலாத, உயர்பெரும் நூலில், ‘திராவிட மொழிகள் அனைத்தி லும்உயர்தனிச்செம்மொழியாய் நிலைபெற்று விளங்கும் தமிழ், தன்னிடையே இடம் பெற்றிருக் கும் சமஸ்கிருதச் சொற்களை அறவே ஒழித்துவிட்டு உயிர் வாழ்வதோடு, அவற்றின் துணையை ஒரு சிறிதும் வேண் டாமல் வளம் பெற்று வளர்வதும் இயலும்.

> **சமஸ்கிருதமே இந்தியாவின் மூல மொழி என்பது நம்மை அடிமையாக்கும் முயற்சி.**

செந்தமிழ் என்றும் தனித்தமிழ் என்றும் சிறப்பிக்கப் பெறுவதும், பெரும்பாலும்அம்மொழி இலக்கி யங்கள் அனைத்தையும் எழுதப் பயன்படுவதுமாகிய பழந்தமிழ் அல்லது இயல்தமிழ், மிக மிகக் குறைந்த சமஸ்கிருதத் தொடர் பையே பெற்றுள்ளது. சமஸ்கிரு தச் சொற்களையும் எழுத்துகளை யும் மேற்கொள்வதை வெறுத்து ஒதுக்கிவிட்டு, பழந்திராவிட தனிச் சிறப்பு வாய்ந்த மூலங்கள், சொல் லுருவங்கள், ஒலி முறைகளை மட்டும் மேற்கொள்வதில் காட்டும் ஆர்வத்தையும் விழிப்புணர்ச்சி யையும் விடாமல் மேற்கொண் டிருப்பதினாலேயே அச்செந் தமிழ், தன் மொழியின் உரை நடை, பேச்சு நடைகளோடு சிறப்பாக வேறுபடுகிறது என்று தமிழ்மொழி செம்மொழியே எனச்சான்றாதாரங்களோடு நிரூ பித்துக் காட்டினார்”

என நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்கள் தனது அறிக்கை யில் குறிப்பிட்டுள்ளார்.

அறிஞர் ராபர்ட் கால்டுவெல் ஐரோப் பிய இனத்தவர் என்று சொல்லி அவரு டைய கருத்துகளை வெறுக்கும் கூட்டத் தாரால், சூரியநாராயண சாஸ்திரி என்ற பெயரைத் தனித்தமிழில் பரிதி மாற்கலைஞர் என மாற்றிக்கொண்டு தமிழ்த் தொண்டாற்றி, உயர்தனிச் செம்மொழி எனப் போற்றிய அறிஞ ரின் ஆய்வுகளை ஒதுக்க முடியுமா? நாகர்கள் - திராவிடர்கள் என்ற ஆய் வின் அடிப்படையில் அண்ணல் அம் பேத்கர் அவர்கள் திராவிட மொழியே தமிழ் என்பதையும், ஆதிக்க மொழி களிடமிருந்து அது தன்னைக் காத்துக் கொண்டதையும் விளக்கியிருப்பதைப் புறக்கணிக்க முடியுமா? சமஸ்கிருதம் தான் இந்திய மொழிகளுக்குத் தாய்

> **தமிழ்மொழி செம்மொழி யென்று முதலில் சொன்ன வெளிநாட்டவர் அறிஞர் ராபர்ட் கால்டுவெல்.**

மொழி என்று சொன்ன சங்கராச்சாரி யார் அவர்களிடம், அப்படியென்றால் **தமிழ்தான் தந்தை மொழி** என்ற வள்ள லாரின் வாதத்தை இந்தக் கூட்டத்தார் மறுப்பார்களா? ஐராவதம் மகாதேவன் தொடங்கி உலகத் தமிழாராய்ச்சி நிறு வனத்தின் தலைவராகப் பொறுப் பேற்றிருக்கும் ஆர்.பாலகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ் வரை பலரும் அகழாய்வு செப்பேடு - கல்வெட்டு - ஊர்ப்பெயர்கள் என எல்லா ஆய்வுகளிலும் காலம் கால மாக தமிழ் மொழி தனித்து இயங்கும் தன்மைகொண்டது என நிரூபித்திருப்பதை மறுக்க முடியுமா?

> **ஒன்றியத்தை ஆள்பவர்கள் தமிழ்ப் பகைவர்கள்.**

**தமிழ் மீது பிரதமர் மோடி மிகுந்த மதிப்பு வைத்திருக்கிறார் என்றும், மாநில மொழிகளின் வளர்ச்சிக்காகத்தான் மும் மொழிப் பாடத்திட்டத்தை வலியுறுத்து கிறோம் என்றும் சொல்கின்ற பா.ஜ.க. வினர் தங்கள் ஆட்சியில் தமிழுக்கு எவ் வளவு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள்? சமஸ்கிருதத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கி யிருக்கிறார்கள்? என்ற வேறுபாடே, அவர்கள் தமிழ்ப் பகைவர்கள் என்பதை வெளிச்சமிட்டுக் காட்டிவிடும்.**

ஒன்றிய கல்வி அமைச்சகத்திட மிருந்து பெறப்பட்ட புள்ளி விவரங் களின் அடிப்படையில் 2014ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு வரையிலான 10 ஆண்டு காலகட்டத் தில் மத்திய சமஸ்கிருதப் பல்கலைக்க ழகம், தேசிய சமஸ்கிருதப் பல்கலைக் கழகம் ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.2,435 கோடி. இதே கால கட்டத்தில் மத்திய செம்மொழித் தமி ழாய்வு நிறுவனத்திற்கு ஒன்றிய அரசு ஒதுக்கியது ரூ.167 கோடி மட்டுமே. சமஸ்கிருதத்திற்கு செலவிடப்பட்டதில் 7 விழுக்காடு மட்டுமே தமிழுக்கு செலவி டப்பட்டுள்ளது. சமஸ்கிருதத்திற்கும் இந் திக்கும் முன்பைவிட பல மடங்கு பணம் ஒதுக்கப்பட்டு, செலவிடப்பட்டு வருகி றது. ஓட்டுக்காக உதட்டளவில் தமிழை உச்சரித்து, உள்ளமெங்கும் ஆதிக்க மொழியுணர்வு கொண்டு செயல்படுகி றது ஒன்றிய அரசு. தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளைப் பேசுபவர்களை இரண்டாந்தர குடிமக்களாக நடத்த முயற்சிக்கிறது.

தமிழ்நாட்டுக்குரிய நிதியைத் தரா மல் வஞ்சிப்பது போலவே தமிழுக் குரிய நிதியையும் ஒதுக்காமல் ஒன்றிய பா.ஜ.க அரசு தொடர்ந்து வஞ்சித்து வரு கிறது. தமிழைப்போலவே இந்தியாவின் பிற மாநில மொழிகளையும் ஆதிக்க

> **தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளைப் பேசுபவர் களை இரண்டாந்தர குடிமக்களாக நடத்த முயற்சிக்கிறது பா.ஜ.க. அரசு.**

மொழிகளைக் கொண்டு அழிக்கத் துடிக்கிறது. மொழித் திணிப்பு ஒரு நாட் டில் எத்தகைய விளைவுகளை உண் டாக்கும் என்பதை உலக சரித்திரத் தைப் புரட்டினால் புரிந்து கொள்ளலாம்.

(தொடரும்)

அன்புடன்

**மு.க. ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2056
மாசி 20
04.03.2025

### வீடூர் அணையில் தண்ணீர் திறப்பு!

## விவசாயிகள் நலனில் அக்கறையுள்ளவர் முதல்வர்!

### அமைச்சர் க.பொன்முடி பெருமிதம்!

மைலம், மார்ச் 4-

விழுப்புரம் மாவட் டம் மயிலம் ஒன்றியம் வீடூர்அணையில் இருந்து பாசனத்திற்காக 3.3.25 முதல் 15.7.25வரை 135 நாட்களுக்கு மொத்தம் 328.56மில்லியன் கன அடி தண்ணீர் பாசனத்திற்கு முதல் திறக்கப்பட்டது.

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வனம் மற்றும்காதி கிராம தொழில்கள் வாரியாத் துறை அமைச்சர் க. பொன்முடி பாசன வச திக்கு வீடூர் அணையில் இருந்து தண்ணீரை திறந்து வைத்தார்.

அப்போது செய்தியா ளர்களிடம் பேசிய அமைச்சர் க. பொன்முடி, விவசாயிகள் நலனில் அக் கறை இல்ல முதலமைச்ச ராக திகழும் மு.க.



ஸ்டாலின் அவர்கள் வேளாண்மைத் துறைக்கு என தனி ஒரு நிதி நிலையை அறிக்கையை உருவாக்கிவிவசாயி களுக்குத் தேவையான எண்ணற்ற பலத்த திட்டங் களை செய்து வருகிறார். மேலும் பெஞ்சல்புயல் மழையால் பாதிக்கப் பட்ட விவசாயிகளுக்கு அவரது வங்கி கணக்கிற்கு முதலமைச்சர் நிவாரண உதவி தொகையை வழங்க உத்தரவிட்டு அப் பணிகள் நடைபெற்று வருகிறது வகையில் விழுப்புரம் மாவட்டம் வீடூர் அணையிலிருந்து வீடூர்,சிறுவை, பொம் மூர், பொன்னம்பூண்டி, கோரக்கேணி, ஐவேலி, நெமிலி, எரையூர், தொள் ளாமூர், கடக்கம்பட்டு, மற்றும் புதுச்சேரி மாநி லம் புதுகுப்பம், காட்டே ரிகுப்பம், தேத்தம்பாக் கம் ஆகிய பகுதிக்கு உட்பட்ட 3200 ஏக்கர் ஆயக்கட்டு பகுதிகளுக்கு தமிழக முதல்வர் உத்தர வுக்கிணங்க வீடூர் அணை யிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் விழுப்பு ரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., மயி லம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிவகுமார், விழுப்புரம் மாவட்ட குழுத்தலைவர் ஜெயச்சந் திரன், திண்டிவனம் சார் ஆட்சியர் திவ்யான்ஷு நிகம்,முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் டாக் டர் மாசிலாமணி மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமா றன்,நீர் பாசன செயற் பொறியாளர் செந்தில் குமார், ஒன்றிய செய லாளர்கள் மணிமாறன், செழியன், திண்டிவனம் வட்டாட்சியர் சிவா,நீர் பாசன உதவி செயற் பொறியாளர் ரமேஷ், பொதுக்குழு உறுப்பினர் வீடூர் ரவி,வீடூர் ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ் வரி பிரகாஷ், ஒன்றிய கவுன்சிலர் சுந்தரி தமிழர சன், நீர்ப்பாசன உதவி பொறியாளர்கள் மோகன் ராமன், சதீஷ், கண்ணன், இளநிலை பொறியாளர் பாபு, உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டம் குச்சனூர் பேரூர் செயலாளர் திலீப்குமார் ஏற்பாட்டில் பொது உறுப்பினர்கள் கூட்டம் தனியார் மண்டபத்தில் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்கத்தமிழ் எம்.பி. தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சின்னமனூர் மேற்கு ஒன்றிய செயலாளர் கண்ணியப்பட்டி முருகேசன், தொகுதி பொறுப்பாளர் நேரு பாண்டியன், மாவட்ட துணை செயலாளர் செந்தில் முருகன் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## திண்டிவனம் அருகே மாணவி தற்கொலை!

### பெற்றோரை செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சந்தித்து ஆறுதல் - நிதியுதவி!

திண்டிவனம், மார்ச் 5-

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகே உள்ள தாராபுரம் கிராமம் பிள்ளையார் கோவில் தெருவைச் சேர்ந்தவர் ராம தாஸ்- கிருஷ்ணவேணி. இவர்களுக்கு மூன்று பிள் ளைகள். இரண்டாவது பிள்ளையான இந்துமதி (19). இவர் கடந்த 2022 ஆம் ஆண்டு அதே ஊரில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பயின்று நல்ல மதிப்பெண் பெற்று 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள் ளார். அதனை தொடர்ந்து புதுச்சேரியில் உள்ள தனி யார் பயிற்சி மையத்தில் நீட் தேர்வுக்காக பயிற்சி மேற்கொண்டு கடந்த ஆண்டு நீட் தேர்வு எழுதி யுள்ளார். அப்போது நீட் தேர்வில் 350 மதிப்பெண் கள் பெற்று நீட் தேர்வில் தோல்வியடைந்துள்ளார். தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக வீட்டிலிருந்தே நீட் தேர்வுக்கான பயிற்சி மேற்கொண்டு வந்த நிலை யில் நீட் தேர்வுக்கு விண் ணப்பம் செய்வதற்கு சில நாட்களே உள்ள நிலையில் ஓபிசி சான்றிதழ் பதிவு செய்து அதனை பெற்றுள் ளார்.

இந்நிலையில் ஓபிசி சான்றிதழை இந்துமதியின் தந்தை மற்றும் சகோதரர் இருவரும் இந்துமதியிடம் அளித்துவிட்டு விவசாய வேலைக்காக நிலத்திற்கு சென்றுள்ளனர். மீண்டும் வீடு திரும்பி வந்து பார்த்த போது இந்துமதி வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டது தெரிய வந்தது.

இதுகுறித்து தகவல் அறிந்த வெள்ளிமேடு பேட்டை காவல்துறையி னர் இந்துமதியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோத னைக்காக விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம். எல்.ஏ. நீட் தேர்வு பயத் தால் தற்கொலை செய்து கொண்ட இந்துமதியின் பெற்றோரை நேரில் சென்று சந்தித்து அவரது குடும்பத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட கழகத் தின் சார்பில் ரூபாய் 25.000 நிதி உதவி வழங்கி குடும் பத்திற்கு ஆறுதல் தெரிவித் தார்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசி லாமணி, விழுப்புரம் வடக்கு மாவட்ட பொரு ளாளர் ரமணன், ஒலக்கூர் மேற்கு ஒன்றிய செயலா ளர் ராஜாராமன், திண்டிவ னம் நகர செயலாளர் ஆசி ரியர் கண்ணன், பொதுக் குழு உறுப்பினர் சாந்தி ஏழுமலை, மாவட்ட விவ சாய தொழிலாளர் அணி அமைப்பாளர் அண்ணா துரை உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருமங்கலம் அரசு மகப்பேறு மருத்துவமனையில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த தினமான மார்ச் ஒன்றில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் மற்றும் குழந்தைகள், குழந்தையின் தாய்மார்களுக்கு பல்வேறு ஊட்டச்சத்துக்கள் தொகுப்பு பெட்டகத்தை மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் வழங்கி வாழ்த்தினார். உடன் கழக நிர்வாகிகள் நாகராஜன், லதா அதியமான், சிவனாண்டி, விமல், ஸ்ரீதர், ரம்யா முத்துக்குமார், கொ. தனபாண்டி, மதன்குமார், கீர்த்திகா தங்கபாண்டியன், நாகராஜ், பி.எஸ்.என்.எல்.செல்வம், ஆதவன் அதியமான், சிவமுருகன், செல்வேந்திரன், ஜாகீர், செல்வம் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் பொதுமக்கள் பங்கேற்றனர்.